**OS.NO. 38 /2022      PW-2**

**நாள் :** 19.11.2025

**பெயர் :** கோதண்டம்

**த/பெ :** சுப்ரமணி

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் வாதி நடராஜன் அழைத்து வந்தார். எனக்கு எழுது படிக்க தெரியும் என்றால் தெரியும். எனது பிராமாணம் வாக்குமூலத்தை யார் சொல்லி தயார் செய்தார்கள் என்றால் நான் அன்று அவருடன் இருந்ததால் வாதி என்னை அழைத்தார் வாதி சொல்லி தயார் செய்யப்பட்டது. எனது ஊர் செங்கனாவரம் என்றால் சரிதான். வாதி நடராஜன் ஊர் ஆயிரமங்கலம் என்றால் சரிதான். அவருடைய நிலம் எனது ஊரில் உள்ளதால் எனக்கு பழக்கம் ஆனார். அவர் எனக்கு சொந்தமா என்றால் இல்லை. வாதி நடராஜனுக்கும் பிரதிவாதிகளுக்கும் என்ன உறவுமுறை என்றால் பிரதிவாதிகள் வாதியின் தம்பி மனைவியும் பிள்ளைகளும் ஆவர். வாதியின் தம்பி பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது.

**2.** எனது பிராமாண வாக்குமூலத்தில் 30.04.2008 அன்று ஏற்பட்ட உடன்படிக்கை எதன் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் கிரையம் வாங்குவதற்காக வாதி முன்பணம் கொடுத்தார் அதற்காக எழுதப்பட்டது. 2008 ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம்

இல்லை. சுமார் 35 வயது இருக்கலாம். அந்த பத்திரத்தின் மதிப்பு என்னவென்றால் எனக்கு தெரியாது. அது பதிவு செய்தார்களா என்றால் தெரியாது. அது எழுதியது மட்டும் தான் தெரியும். அந்த பத்திரத்தை எங்கு யார் முன்பாக எழுதினார்கள் என்று பிராமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் ஊர் தலைவர் முன்பாக தான் எழுதப்பட்டது. ஊர் தலைவர் பெயர் டி. மனோகர் ஆகும். அவர் தற்போது உயிருடன் இல்லை. முதலாவது பிரதிவாதியும் பிள்ளைகளும் அந்த பத்திரத்தில் என் முன்பாக தான் கையெழுத்து போட்டார்களா என்றால் ஆமாம். அவர்கள் யார் என்று தெரியாது. வாதி அவர்கள் கையொப்பம் செய்யும் போது அவர்கள் அவரது தம்பி மனைவி மற்றும் பிள்ளைகள் என்று கூறினார்.

**3.** அந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் யார் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் டீ சாப்பிட சென்றேன். அப்படி என்றால் நான் எனது பிராமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் வாதிக்கு சுவாதினம் கொடுத்தாக குறிப்பிட்டிருக்கும் அந்த சமயத்தில் நான் அங்கு இல்லையா என்றால் சரியல்ல. டீ சாப்பிட்டு மீண்டும் வந்து அங்கு எல்லா முடிந்த பிறகு ஊர் தலைவருடன் சென்றேன். சாட்சிகள் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எனது பிராமாண வாக்குமூலத்தில் டீ சாப்பிட சென்றேன் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் ஏன் அந்த பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் ஏற்கனவே 3 நபர்கள் கையொப்பம் செய்துள்ளதால் நான் செய்யவில்லை.

4. உண்மையில் வ.சா.1 கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு இருந்தால் வாதி அதில் உள்ள சாட்சிகளை நீதிமன்றத்திற்க சாட்சியம் அளிக்க வரவைத்திருப்பார் என்றாலும் அது போலியான ஆவணம் என்பதால் தான் அவர்களை அழைக்காமல் என்னை அழைத்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையாக அந்த ஆவணம் ஏற்பட்டு இருந்தால் அதில் நானே சாட்சியமாக கையொப்பம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை ஆகவே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.11.20 11:04:03 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.